தால் அவைகளின் நுரையீரலில் நோய் வந்திருக்கிறது என்றும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலிருந்து அவைகள் மாற்றப்பட வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. இரண்டு யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, கிண்டி பார்க்குக்குப் பக்கத்தில் 100-150 ஏக்கர் ஒதுக்கப்பட்டால் அங்கே வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொன்று, வண்டலூருக்குப் பக்கத்தில் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்டலூர் சென்னைக்கு வெகுதூரத்தில் இருப்பதால், வெளியிலிருந்து வருபவர்கள் அங்கே சென்று பார்ப்பது கஷ்டம் என்கிற காரணத்தால், கிண்டியில்தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

மேலக்கட்டளை—சின்னமநாய்க்கன்பட்டி சாலை

*253 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளைக்கு சின்னமநாயக்கம்பட்டியிலிருந்து சாலை அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை எப்போது வந்துள்ளது?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு ஒரு கோரிக்கை 3—5—1971 அன்று வந்துள்ளது.

(இ) மேற்படி கோரிக்கை ஊராட்சி ஒன்றியத்தின் பரிசிலனையில் உள்ளது.

வேலாண்டிபாளையத்தில் பாலம்

*254 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள தெலுங்கு பாளையம் நகரப் பஞ்சாயத்தைச் சேர்ந்த வேலாண்டிபாளையம் என்ற ஊரின் நடுவேயுள்ள பள்ளத்தின் குறுக்கே ஒரு பாலம் கட்ட நிதி உதவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை. அடுத்த கேள்வி . . .255.

THIRU K. T. K. THANGAMANI: Has question No. 254 been put?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வினு கேட்கப்பட்டு, விடையும் அளிக்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அந்த 254-வது கேள்விக்குத்தான் துணை வினு கேட்க எழுந்தார்கள். வேலாண்டிபாளையத்தின் அருகே பாலம்